புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கந்த புராணத்தில் காணப்படும் விரதங்கள் மற்றும் விழாக்கள்

ச.மணிகண்டராஜா
பதிவு எண்:R20162345/2020
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி – 630003

முனைவர்.மா.சிதம்பரம்.
நெறியாளர் & இணைப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி - 630003

ஆய்வுச் சுருக்கம்

உழைத்துக்களைத்த மனிதனின் ஓய்வு நேரப் பொழுதுபோக்கிற்காகவும், மனமகிழ்விற்காகவும், சமுதாய ஒற்றுமைக்காகவும் பண்பாட்டுப் பதிவாகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. மக்கள் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும் புத்துணர்வும் தருவன விழாக்கள் ஆகும். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றைக் காலகாலமாகப் போற்றிக் கொண்டாடப்படுகின்ற விழாக்களின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய விழாக்கள் அகப்புறத் தூய்மைக்கும், வித்திடும் வகையில் அமைகின்றன. விழாக்களும், விரதங்களும் தமிழர் வாழ்வில் ஒன்றோடென்று பின்னிப் பிணைந்தவை ஆகும். அடியவர்கள் விழாக்கள் மற்றும் விரதங்களின் மூலம் வாழ்வில் இன்பத்தையும், வீடு பேற்றினை அடைந்துள்ளமையை இக்கட்டுரை விளக்குகின்றது.

## முன்னுரை

முன்னோர்கள் திருவிழாக்களைத் தோற்றுவித்தின் நோக்கமே உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் இறைவன் முன் ஒன்று கூடுவதற்காகவும், மகிழ்வாக வாழ்வதற்காகவும் மட்டும் தான். ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, நம்பிக்கைகள், வாழ்க்கை முறை முதலியவற்றை அச்சமுதாயம் கொண்டாடும் விழாக்கள் மூலம் அறிய முடியும். கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ள அத்தகைய விழாக்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வழிபாடு

'வழிபடு' என்ற வேர்ச் சொல்லில் இருந்து 'வழிபாடு' என்னும் சொல் தோன்றியது. வழிபாடு என்ற சொல்லுக்கு 'வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை' எனவும் "இறைவனை வணங்கும் செயல்"[2] எனவும் அகராதிகள் குறிப்பிடுகின்றன. "வழிபாடு என்பது ஒருவன் தன்னையோ, பிறரையோ இறைவனிடம் வழிப்படுத்துதல்" என்பர் இரா.சீனிவாசன்.

## திருவிழாக்கள்

"திருவிழாக்கள் எல்லா நாட்டுப் பண்பாடுகளிலும் முக்கிய இடம் பெறுகின்றன. மக்கள் தங்கள் கவலைகளை மறந்து உற்சாகமாக இருப்பதற்காகத் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர்"[3] தமிழ்நாட்டில் கோயில்கள் மிகுதியாக இருப்பதால் சமயச் சார்பான திருவிழாக்கள் மிகுதியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. 'திரு' என்ற சொல் - செல்வம், அழகு, ஒளி, பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை என்ற பலப்பொருள்களைக் கொண்டுள்ளது. 'விழா' என்பது கொண்டாட்டம் ஆனந்தம், மகிழ்ச்சி, இன்பம், உல்லாசம், களிப்பு, மக்கள் உள மகிழ்தல் எனப் பலபொருள் தருகிறது. ஆகவே திருவிழா என்பது அழகு பொருந்திய ஆனந்த நிகழ்வு என்படுகிறது.

விழா- சொற்பொருள் விளக்கம்

விழா என்னும் சொல் அதன் சிறப்பையும், பெருமையினையும் கருத்தில் கொண்டு அதனை 'திருவிழா' என்றும், அதை நடைபெறும் பிரம்மாண்டத்தை வைத்து அதனை 'பெருவிழா' என்றும் அழைத்தனர். இவ்விழாக்கள் சடங்குகளில் இருந்து தோன்றின என்பன மானுடவியலார். இருந்த போதும் இவ்விழா தோன்றியது என்று கூறமுடியாத தொன்மையுடையது. "விழா என்னும் சொல்லுக்கு 'மங்கலச் சடங்கு' என்று பொருள் தருகின்றது கழக அகராதி."[6]

பழந்தமிழ் இலக்கியங்களில் விழாக்கள்

பண்டைய காலத்தில் தமிழ்நிலத்தில் விழாக்கள் கொண்டாடியவை பற்றிச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் குறிப்பிகின்றன. இக்கருத்தினை

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"[4]
(சிலம்பு: 5: 72 -73)

என்ற சிலப்பதிகார அடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும்,

"பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கு என்"[5]
(மணிமேகலை: 1: 70- 72.)

என்ற அடிகளும் விழாக்கள் கொண்டாடியதைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

விழா வேறுபெயர்கள்:-

சங்க காலத்தில் விழாவை 'விழவு' 'சாறு' 'சாலு' என்ற வேறு பெயர்களில் அழைத்தமையைப் பின்வரும் சான்றுகள் மூலம், அறிய முடிகின்றது. இதற்கு,

"விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்"[7]
"சாலு கொண்ட களம் போல்"[8]

என்ற அடிகள் சான்றாகின்றன. சங்க கால மக்கள் 'கால்கோள்' செய்து, கொடியேற்றி பிறகு மூதூர்களில் விழாக் கொண்டாடினர்.

வகைகள்

திருவிழாக்கள் மாதவிழா - பெருவிழா – அன்பர்விழா என அழைக்கப்படுகின்றன. வடமொழியில் மாசோத்ஸ்வம், மகோத்ஸ்வம், பக்தோத்ஸ்வம் என அழைக்கப்பெறும். இவற்றுள் மகோத்ஸ்வம் ஒருநாள், மூன்றுநாள், ஐந்துநாள், ஏழுநாள், ஒன்பதுநாள், பன்னிரண்டு நாள் எனக் கொண்டாடப் பெறுவதால் ஆறுவகைப்படும். இவை முறையே சிவம், சாத்துவிகம், பௌதிகம், ஸ்ரீகரம், சௌக்யம், பைதிருகம் எனப் பெயர் பெறும். இதில் முதல் மூன்றும் கொடியேற்றாமல் கொண்டாட வேண்டியது. இறுதி மூன்றும் கொடியேற்றிக் கொண்டாடத்தக்கவை ஆகும்.

வெறியாட்டு விழா

பண்டையநாளில் பெருவழக்காக இருந்தது வெறியாட்டு விழாவாகும். குரவைக் கூத்துக்குப் பின் தெய்வங்களுக்குரிய பலிகளைச் செலுத்தி, வெண்ணிற அரிசி, மஞ்சள், மலர் ஆகியவற்றைச் சிதறி, ஆட்டை வெட்டி நீண்ட வேலை உடைய முருகனுக்கு விழா எடுத்து, வேலனைக் கொண்டு வெறியாடல் செய்தனர். இக்கருத்தினை,

"காலை அதன்பின் கடவுள் பலி செலுத்தி
வால் அரிசி மஞ்சள் மலர்சிந்தி மறி அறுத்துக்
கோல நெடுவேல் குமரன் விழா கொண்டாடி
வேலனை முன் கொண்டு வெறியாட்டு நேர்வித்தான்"
கந்தபுராணம் (6: 24: 40)

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது. மேலும்,

*முருகனுக்காக எடுக்கப்பட்ட இவ்விழாவில் முருகன் வேலைக் கையில் ஏந்தி ஆடுவான். இன்னிசைக் கருவிகள் முழங்கட்டும். தினை அரிசியையும், மலர்களையும் தூவுவர். ஆட்டுக்கிடாயை அறுத்துக் குருதியைச் சிந்துவர். இக்கருத்தினை.*

*“களம் நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி,*
*வளநகர் சலம்பப் பாடிப்பலி கொடுத்து,*
*உருவச் செந்தினை குருதியொடு தூஉய்,*
*முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்”[9]*

*என்ற அகநானூறு பாடல் மூலம் தெரிய வருகின்றது.*

*விநாயக சதுர்த்தி விழா*

*ஐந்து கரங்களை உடைய விநாயகப் பெருமான் அவற்றைக் கேட்டு, அவ்வாறே ஆகட்டும் என்று அருள் செய்தார். சூரியனுக்கு உரிய மாதமான ஆவணியில் சதுர்த்தி நாளில் (சுக்கிலபட்சத்து நான்காம் நாள்) வானத்தை உலகினர் பார்க்காத முறையில் அமைந்திட, அந்த ஆவணிமாதச் சதுர்த்தியில் விநாயகப் பெருமானுக்கு உலகோர் சிறந்த பூசனைகள் செய்தனர். இதற்கு,*

*“ஐங்கரன் அதனைக் கேளா அவ்வகை அருள வெய்யோன்*
*திங்களின் முதலாம் பாலில் செல் உறு நாலாம் வைகல்*
*மங்குல் சூழ் உலகம் நோக்கா மரபினால் வதிந்தாய் மற்றுஅப்*
*புங்கவற்கு அந் நாள் மிக்க பூசனை புரிய மேலோர்”.*

*கந்தபுராணம் (6: 4: 14)*

*என்ற பாடல் சான்றாகின்றது.*

*மாசி மகம்*

*பல சிறப்புக்களை உடைய மிக்க நீரை உடைய யமுனை ஆற்றின் நிலைபெற்ற வழியில், மாசி மகத் தீர்த்தமாடுதலை விரும்பி, அந்நிலத்தைச் சார்ந்தவர்கள் அனைவரும் நதியை அடைந்தனர். உலகத்தில் தனக்கு ஒப்பார் இல்லாது அரசாட்சி செய்யும் தக்கனும் நீராட விரும்பினான். இதனை,*

*“இன்ன பல்வகைத்தாய் நீடும் இரும்புனல் யமுனையின் கண்*
*மன்னிய நெறி சேர் மாசி மகப்புனல் ஆட வேண்டி*
*அந்நிலத்தவர்கள் யாரும் அடைந்தனர் உலகம் எல்லாம்*
*தன்நிகர் இன்றி ஆளும் தக்கன் இத்தன்மை தேர்ந்தான்.”*

*கந்தபுராணம் (6: 6 : 14)*

*என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.*

*மார்கழி மாத சஷ்டி விரதம்*

*‘தனு’ என்று சொல்லப்படுகின்ற மார்கழி மாதத்தில் திங்கள் வளரும் பூர்வ பட்டத்தில் ஆறாம் நாள் சஷ்டித் திதியில் திருமால், சிவ பெருமானை வழிப்பட்டது போல, யாவரும் முடிவு காண இயலாத உம்முடைய மலரடிகளை அடைக்கலம் என்று அந்நாளில் பூசை செய்திட அவ்வாறு செய்தவர்களின் துன்பங்கள் முழுவதையும் அப்பொழுதே நீக்கிப் பெருஞ்செல்வத்தை அருள வேண்டும். இத்தகைய வரத்தை அருள வேண்டும் எனத் திருமால் வேண்டுவது போல மார்கழி மாத சஷ்டி விரதம் கூறப்பட்டுள்ளது. இதனை,*

*“வில் நாமம் புகல்கின்ற திங்கள் தன்னில்*
*மிக்க மதி தனில் ஆறுஆம் பக்கம் ஆகும்*
*இந்நாளில் யான் உன்னை அருச்சித்து இட்ட*
*இயற்கை போல் யாரும் இனி ஈறு இலா உன்*
*பொன்ஆரும் மலர் அடியே புகல் என்று உன்னிப்*
*பூசை புரிந்திடவும் அவர் புன்கண் எல்லாம்*
*அந்நாளே அகற்றி நீ உலவாச் செல்வம்*
*அளித்திடவும் வேண்டும் இஃது அருள்க என்றான்.”*

*கந்தபுராணம் (6 : 15 :4)*

*என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.*

*சிவராத்திரி*

*திருமாலும் நான்முகனும் அடியும் முடியும் தேடிச் சென்ற அந்த திருவண்ணாமலை அக்கினி வடிவம் பெற்றது. அருணாசலம் என்று புகழும்படி அந்த மலை விளங்கிற்று. இவ்வாறு அம்மலையானது சோதி வடிவாக எழுந்தருளிய இரவு சிவராத்திரி என்ற சிவ புண்ணியக் காலமாக விளங்கிற்று. அந்த இரவில் உலகத்தார் பலரும் சிவலிங்கப் பெருமானை முறைப்படி வணங்கி வீடுபேறு அடைந்தனர். இக்கருத்தினை,*

*"அரியும் யானும் முன் தேடும் அவ்வனல் கிரி அனல*
*கிரி எனும் படி நின்றது ஆல்அவ் ஒளிகிளர்ந்த*
*இரவு அதே சிவராத்திரி ஆயின இறைவர்*
*பரவி உய்ந்தனர் அன்னது ஓர் வைகலில் பலரும்."*

*கந்தபுராணம் (6: 21: 96)*

*என்ற பாடல் உணர்த்துகின்றது.*

*மகா சிவராத்திரி விரதம்*

*சிவபெருமான் யாவராயினும் இரவுப் பொழுதில் அன்புடன் உன் திருவடியை வழிபட்டவர்களுக்குக், குற்றம் இல்லாத மாசி மாதம் சந்திரன், சூரியன் இருவரும் ஒன்று கூடுகின்ற அமாவாசைக்கு முதல்நாள், சதுர்த்தியில் மகாசிவராத்திரி பூசை செய்யும் சிறப்பைத் தந்தருள வேண்டும் என்று வேண்டினர். இதனை,*

*"நிற்றலும் அல்லில் எம்போல் நின்னடி எனையர் ஏனும்*
*பற்றுடன் அருச்சித் தோர்க்குப் பழிதவிர் மாகத் திங்கள்*
*உற்றிரு கதிரும் ஒன்றும் ஒண் பகல் முதல் நாள் கங்குல்*
*பெற்றிடு சிறப்பு நல்க வேண்டும் ஆல்பெரும என்றார்."*

*கந்த புராணம் (6: 5: 38)*

*என்ற பாடல் உணர்த்துகின்றது.*

*கந்தர் சஷ்டி விரதம்*

*வசிட்டமா முனிவர் கந்தவேள் விரதங்களை முசுகுந்த மன்னனுக்கு உபதேசம் செய்யும் பகுதியில் கந்தர் சஷ்டி விரதத்தினையும் அதன் பெருமையினையும் கூறுவதைக் காண முடிகின்றது.*

*கிரவுஞ்ச மலையைத் தாரகனோடு கொன்ற ஒப்பற்ற வேலை உடைய கையைக் கொண்ட கந்தவேளை வழிபட்டுத் தேவரும் முனிவரும் ஐப்பசி மாதத்தில் சுக்கில பட்சத்தில் முதல்நாள் பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறு நாட்கள் நோன்பினை மேற்கொண்டார்கள். இதனை,*

*"வெற்பு ஓடும் அவுணன் தன்னை வீட்டிய தனிவேல் செம்கை*
*அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாரும்*
*சொல்படு துலையின் திங்கள் சுக்கில பக்கம் தன்னில்*
*முன் பகல் ஆதி ஆக மூ இரு கைவல் நோற்றார்."*

*கந்தபுராணம் (6: 23: 20)*

*என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.*

*அடியவர்கள் முதல் நாள் தொடங்கி சஷ்டி ஈறாக ஆறு நாட்களும் காலையில் நீர் நிலையில் மூழ்கி, இரண்டு ஆடைகள் உடுத்தி, காலந்தோறும் செய்யக் கூடிய கடமைகளைச் செய்த பிறகு கம்பம், தம்பம், கும்பம் என்ற மூன்றிலும் கந்தவேளை எழுந்தருளச் செய்து வழிபட்டனர். இதனை,*

*"முந்திய வைகல் ஆதி மூ இரு நாளும் காலை*
*அந்தம் இல் புனலின் மூழ்கி ஆடை ஓர் இரண்டு தாங்கிச்*
*சந்தியில் கடன்கள் செய்து தம்பவிம் பங்கும் பத்தில்*
*கந்தனை முறையே பூசை புரிந்தனர் கங்குல் போதில்."*

*கந்தபுராணம் (6: 23: 21)*

*என்ற பாடல் எடுத்துரைக்கின்றது.*

*இன்சுவை நிறைந்த வெல்லக் கட்டியுடன், நெய்சேர்த்துச் சடைக்கப் பட்ட குற்றமில்லாத மோதகத்தைக் கந்த வேளுக்குப் படைத்து, மற்ற உபசாரங்களையும் செய்து, முருகப்பெருமானின்*

புகழைக் கூறும் புராணங்களைக் கேட்டு, குவிந்த கையில் சிறிது நீரை உண்டு, ஆறு நாட்களுக்கு விரதம் இருந்தனர். இதனை,

"நிறை தரு கட்டி கூட்டி நெய்யினால் சமைக்கப்பட்ட
குறை தவிர் மோதகத்தைக் குமர நாயகற்கு அருத்திப்
பிறவுள விதியும் செய்து பிரான் திருப் புகழ் வினாவி
உறுபுனல் சிறிது மாந்தி உபவசித்து இருந்தார் மாதோ."

கந்த புராணம் (6: 23: 22)

என்ற பாடலின் வழி அறியமுடிகின்றது.

வேதத்தை உணர்ந்த முனிவர்களும், தேவர்களும் சஷ்டிக்கு அடுத்த நாள் சப்தமியில் முருகனுக்குச் சிறப்பான பூசை செய்து, விதிப்படி பாராயணம் செய்தனர். இந்த விரதத்தால் மாலை சூடிய அசுரர்களால் கவரப்பட்ட தங்கள் பதவிகளை மீண்டும் தேவர்கள் பெற்றனர். இக்கருத்தினை,

"ஆரண முனிவர் வானோர் அங்குஅதன் மற்றை வைகல்
சீர் அணி முருக வேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்
பாரணம் விதியில் செய்தார் பயிற்றும் இவ் விரதம் தன்னால்
தாரணி அவுணர் கொண்ட தம் பதத் தலைமை பெற்றார்."

கந்தபுராணம் (6: 23: 23)

என்ற பாடல் உணர்த்துகின்றது.

முடிவுரை

தமிழர்கள் திருவிழாக்களைத் தோற்றுவித்ததின் நோக்கமே உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் இறைவன் முன் ஒன்று கூடி மகிழ்வதற்காக மட்டும் இன்றி நோன்புகளும், விரதங்களும் இருப்பதன் மூலம் மக்கள் வாழ்வில் இன்பத்தையும், வீடு பேற்றினை அடைந்ததையும் இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. முனைவர் சக்திவேல். சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.145
2. க்ரியாவின் தற்காலத்தமிழகராதி, ப. 909.
3. சுப்பிரமணியன். பெ. தமிழர் திருவிழாக்களும் பண்பாடும், ப. 1.
4. முனைவர் சிலம்பொலி செல்லப்பன். சு. சிலப்பதிகாரம், ப.72.
5. முனைவர் சிலம்பொலி செல்லப்பன். சு. மணிமேகலை, ப.46.
6. கழக அகராதி, ப. 14.
7. புலவர் நடராசன் பி.ரா. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, ப. 215.
8. புறநானூறு பாடல் (22 : 16 வரி)
9. அகநானூறு களிற்றியானை நிரை. பாடல்: 22 (8-11)

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரம்

1. முத்தப்பன் .பழ (உரையாசிரியர்) – கந்தபுராணம் (மூலமூம் உரையும்)
உமா பதிப்பகம்,
18/171 பவளக்காரத்தெரு,
மண்ணடி, சென்னை.
மறு பதிப்பு பிப்ரவரி 2021.

துணைமை ஆதாரங்கள்

1. சிலம்பொலி செல்லப்பன் (உரையாசிரியர்) - சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்)
பாரதி பதிப்பகம்,
126/108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை.

மூன்றாம் பதிப்பு – டிசம்பர் 2012.

2. மேலது - மணிமேகலை (மூலமும் உரையும்)
பாரதி பதிப்பகம்,
126/ 108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை.
இரண்டாம் பதிப்பு – டிசம்பர் 2012.

3. சுப்பிரமணியன். பெ - தமிழர் திருவிழாக்களும் பண்பாடும்
ராம்குமார் பதிப்பகம்,
பழனி.
முதற்பதிப்பு – 1999.

4. சோமசுந்தரனார். பொ. வே. (உ.ஆ) – அகநானூறு (மூலமும் உரையும்)
திருநெல்வேலி சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு
சென்னை. முதற்பதிப்பு - 1965.

5. மேலது - புறநானூறு (மூலமும் உரையும்)
திருநெல்வேலி சைவ சித்தாந்த
நூற்பதிப்பு கழக வெளியீடு
சென்னை. முதற்பதிப்பு - 1965.

6. புலவர் நடாசன் பி.ரா. - சங்க இலக்கியம் பத்துப்பாட்டு
(மூலமும் உரையும்)
திருமகள் நிலையம்,
சென்னை – 600 017.
முதற்பதிப்பு – ஆகஸ்ட் 2014.

7. அகராதி - க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி,
268, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை – 600 014.
முதற்பதிப்பு – 1992.

********* ********* ********** ********* ********* ********** ********** **********